(ஆ) எத்தனை பேர்களுக்கு அந்த நிலையத்தில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி : (அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் ஒன்றியத்தில் தொளசம்பட்டி மற்றும் ஓலைப்பட்டி ஆகிய இரண்டு இடங்களில் பனைப் பொருள் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

(ஆ) தொளசம்பட்டியில் 10 பேர்களுக்கு மூன்று மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இது தவிர ஓலைப்பட்டி அரிசன காலனியில் 20 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிரைசம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்ட அவர்களுக்கு பயிற்சி காலம் முடிந்து விட்டது. பயிற்சி பெற்ற பெண்கள் தற்போது வேலை இல்லாமல் இருப்பதால், ஐ. ஆர். டி. பி. மூலமாக கூட்டுறவுத் துறையில் இவர்களுக்கு ஏதாவது தொழில் கூடம் அமைத்து நல்ல வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தர அமைச்சர் அவர்கள் முயற்சிப்பாரா?

மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, பயிற்சி பெற்றவர்களுக்கு தனி கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் மேய்ச்சேரி, வெள்ளாறு கிராமத்தில் பயிற்சி பெற்ற பெண்கள் உற்பத்தி செய்யும் பனைத்தும்பை சேலம் மாவட்ட கூட்டுறவு சங்கம் தொடர்ந்து கொள்முதல் செய்வதன் மூலம் அவர்களுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்ட கடற்கரையோரங்களில் மீனவர் வழிகாட்டி விளக்குகள் அமைக்கும் திட்டம்.

114—(* வினா எண். 20327) திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்ட கடற்கரையோரங்களில் எங்கெங்கு மீனவர் வழிகாட்டும் விளக்குகள் அமைக்கப்படுகின்றன?

(ஆ) வெள்ளப்பள்ளம், ஆற்காட்டுத்துறை, கோவில்பத்து, விழுந்தமாவடி ஆகிய இடங்களில் வழிகாட்டும் விளக்குகள் அமைக்கப்படுமா?

1984 பிப்ரவரி 21]

மாண்புமிகு திரு. க. கலைமணி: (அ) தஞ்சை மாவட்ட கடற்கரையோரங்களில் ஏர்புரக்கரை, மல்லிப்பட்டினம், செந்தலைவாயல், காரையூர், வானமாதேவி, கோடிக்கரை, செண்பகமாதேவிப் பட்டிணம், ஆற்காட்டுத் துறை, காமேஸ் வரம், சோமநாதபட்டிணம், வேளாங்கன்னி, விழுந்தமாவடி, சேதுபாவச்சத்திரம், கழுமண்குடா, பழையாறு, திருமுல்லை வாசல் மற்றும் தரங்கம்பாடி ஆகிய இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) விழுந்தமாவடியில் விளக்குத்தூண் (Tower) அமைக்கப் பட்டுள்ளது. ஆற்காட்டுத் துறையில் விளக்குத்தூண் நிறுவப் பட்டுள்ளது. மற்ற வேலைகளும் நடைபெறுகின்றன. வெள்ளப் பள்ளம் மற்றும் கோவில்பத்து ஆகிய இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, விளக்குத் தூண்கள் இரண்டு இடங்களில் அமைப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வெள்ளப்பள்ளம் மற்றும் கோவில் பத்து ஆகிய கிராமங்களில் விளக்குத்தூண் அமைப்பதற்கு இப்போது முடியவில்லையென்றாலும், அடுத்த ஆண்டாவது நடவடிக்கை எடுக்கப் பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: தலைவர் அவர்களே, வெள்ளம்பள்ளம், கோவில்பத்து ஆகிய இடங்களில் அடுத்த ஆண்டு விளக்குத்தூண் அமைப்பதற்கான நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, கோடிக் கரையில் விளக்குத்தூண் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். கோடிக்கரையில் விளக்குத்தூண் அமைக்கவேண்டிய அவசியம் இல்லை. அங்கே ஏற்கனவே கலங்கரை விளக்கம் இருக்கிறது. ஆகவே, கோடிக்கரையில் அமைப்பதற்கு பதிலாக நான் முன்பு கேட்ட அந்த இரண்டு கிராமங்களில் விளக்குத்தூண் அமைக்க இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப் படும்.

திரு. என். விஜயபாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பூம்புகார் தொகுதியில் சந்திரபாடி, பானகிரி, பெருமாள்பேட்டை, சின்னக்காளை, சின்னமேடு போன்ற கடற்கரை ஓரங்களில் உள்ள மீனவர் கிராமங்களில் விளக்குத் தூண் அமைக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. கலைமணி ; பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்து தேவையான இடங்களில் ஆவன செய்யும்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984 (ஆ இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு,, 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—